**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்**
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
*******

ஆணை எண். 64/ந/2019
நாள்.10.01.2020

திரு.எம்.எஸ்.முஹம்மது சாலீஹு,
சென்னை. – முறையீட்டு மனுதாரர்

ஆணையாளர்,
காயல்பட்டணம் நகராட்சி. – எதிர்மனுதாரர்

சென்னை, முத்துமாரி செட்டித் தெரு, பழைய எண்.37, புதிய எண்.86 என்கிற முகவரியில் வசிக்கும் திரு.எம்.எஸ்.முஹம்மது சாலீஹு என்பவரின் 02.04.2019 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 03.04.2019 அன்று பெறப்பட்டு 064/ந/2019 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

சென்னை, முத்துமாரி செட்டித் தெரு, பழைய எண்.37, புதிய எண்.86 என்கிற முகவரியில் வசிக்கும் திரு.எம்.எஸ்.முஹம்மது சாலீஹு என்பவர் தனது மனுவில்:–

அனைத்து உள்ளாட்சி அமைப்புகளும் பராமரிக்கும் முக்கிய ஆவணங்களில் ஒன்று தீர்மானங்கள் புத்தகம் (minutes book). ஒரு உள்ளாட்சி அமைப்பின் அனைத்து முக்கிய முடிவுகளும் இந்த புத்தகத்திலேயே அடங்கி இருக்கும். காயல்பட்டணம் நகராட்சியில் இந்த புத்தகத்தில் முறைகேடான முறையில் காயல்பட்டணம் நகராட்சி அதிகாரிகளால் திருத்தங்கள் (Forgery) செய்யப்பட்டுள்ளது.

ஜூலை 25, 2017 அன்று காயல்பட்டணம் நகராட்சியின் நகர்மன்ற கூட்டம் நடந்ததாக கூறப்படுகிறது. மக்களால் தேர்வு செய்யப்பட்ட உறுப்பினர்கள் இல்லாத நிலையில், இந்த கூட்டம் அப்போதைய நகராட்சி ஆணையர் திரு.பொன்னம்பலம் தலைமையில் நடந்துள்ளது. அந்த கூட்டத்தில் கீழ்காணும் பொருள் முதல் பொருளாக வைக்கப்பட்டுள்ளது.

''காயல்பட்டணம் நகராட்சியில் 14வது வார்டுக்குட்பட்ட பாஸ் நகர் மூன்றாவது தெரு சாலை மண்சாலையாக இருப்பதால் பொதுமக்கள் நலன் கருதி அதனை சிமெண்ட் கல் பதித்து

புதியதாக சாலை அமைக்க தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.9.68 இலட்சத்திற்கு மன்ற அனுமதிக்கும் மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவு செய்திடவும் மன்றம் அனுமதிக்காக".

அதன் பிறகு அந்த பொருள் ஏற்றுக்கொள்ளப்பட்டு தீர்மானம் எண்.1414 ஆகவும் நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்த விபரம் நகராட்சி இணையதளத்தின் (htpp://123.63.242.116//Kayalpattinam) தீர்மானங்கள் பக்கத்தில் (Council Resolutions) உள்ளது.

4.12.2017 அன்று 1 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 5 சாலைகளை (அப்பாபள்ளி தெரு, மக்தூம் தெரு, செப்புகுடைஞ்சான் தெரு, சதுக்கைத் தெரு மற்றும் சொளுக்கார் தெரு) TURIP 2017–18 என்ற திட்டத்தின் கீழ் புனரமைக்க, காயல்பட்டணம் நகராட்சி, ஒப்பந்தப்புள்ளி கோரியது. அதை தொடர்ந்து, இந்த திட்டம் சம்பந்தமான சில விபரங்களை, தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ், 11.02.2018 தேதிய விண்ணப்பம் வாயிலாக, நான் கோரியிருந்தேன். 06.03.2018 தேதிய பதில் வாயிலாக, நான் கோரிய தகவல்களை, நேரில் வந்து பார்த்துக்கொள்ள காயல்பட்டணம் நகராட்சியின், பொது தகவல் அலுவலர் தெரிவித்தார்.

17.04.2018 அன்ற காயல்பட்டணம் நகராட்சிக்கு நேரில் சென்று, நான் கோரிய தகவல்கள் அடங்கிய ஆவணங்களை பார்வையிட்டேன். ஆவணங்களை நான் பார்த்தபிறகு, அதில் எனக்கு தேவையான பக்கங்களை நகல் தர அதிகாரிகள் மறுத்ததை அடுத்து 21.04.2018 தேதிய கடிதம் மூலமாக நான் பார்வையிட்ட ஆவணங்கள் சிலவற்றின் நகலினை தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ், நகராட்சியிடம் கேட்டேன். நான் கோரிய ஆவணங்கள் 3.05.2018 தேதிய கடிதம் மூலம் நகராட்சியினால் அனுப்பப்பட்டது.

நகராட்சி எனக்கு அனுப்பிவைத்த ஆவணங்களில் 4.12.2017 கோரப்பட்ட காயல்பட்டணம் நகராட்சியினால் 1 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான ஒப்பந்தப்புள்ளிகளின் மதிப்பீட்டிற்கு அனுமதி வழங்கி நகராட்சி நிறைவேற்றிய தீர்மானம் (எண்.1414) உடைய நகலும் அடங்கும்.

இதில் அதிர்ச்சிக்குரிய விஷயம் என்னவெனில் தீர்மான எண்.1414–ல் உள்ள தீர்மானத்தின் எண்ணும் (எண்.1414) தேதியும் (25.07.2017) உள்ள தீர்மானத்தின் எண்ணும் (1414) தேதியும் (25.07.2019) ஒன்றே ஆனால் இரண்டும் வெவ்வேறு பொருள்கள் சம்பந்தமானவை. மேலும் இணைப்பு 2–ல் உள்ள தீர்மான வாசகம், 1 கோடி ரூபாய் மதிப்பிட்டில் 4 சாலைகள் புனரமைக்கப்படும் என கூறியுள்ளது. ஆனால் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதோ, 1 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 5 சாலைகளுக்கு (தீர்மானத்தில் சொளுக்கார் தெரு விடுபட்டிருந்தது). இந்த முரண்பாடுகளை, தவறுகளை சுட்டிக்காட்டி 05.05.2018 அன்று, காயல்பட்டணம் நகராட்சியின் ஆணையருக்கு நான் கடிதம் எழுதினேன்.

ஆணையரால் எந்த பதிலும் வழங்கப்படவில்லை. எந்த பதிலும் பெறப்படாத காரணத்தால் 13.11.2018 தேதிய கடிதங்கள் மூலம் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அரசு முதன்மை செயலர் மற்றும் நகராட்சி நிர்வாகத்துறை ஆணையர் ஆகியோர்

கவனத்திற்கும் இவ்விஷயத்தை எடுத்து சென்றேன். இன்றைய தேதி வரை, அவர்களிடம் இருந்தும் இது சம்பந்தமான எந்த பதிலும் கிடைக்கப்பெறவில்லை.

நகராட்சியின் தீர்மானம் புத்தகத்தில் உண்மையில் எந்த தீர்மானம் உள்ளது. இணைப்பு 1–ல் உள்ள தீர்மானமா, அல்லது இணைப்பு 2–ல் உள்ள தீர்மானமா என அறிந்திட, தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் நகராட்சி தீர்மான புத்தகத்தை பார்வையிட (file inspection) 03.11.2018 தேதிய மனு மூலம் நேரம் கோரியிருந்தேன். அதன்படி, சில தினங்கள் கழித்து, நேரடியாகவும் நகராட்சி அலுவலகத்தில், தீர்மானம் புத்தகத்தை பார்வையிட்டேன்.

நான் நேரில் தீர்மான புத்தகத்தை பார்வையிட்ட போது, தீர்மான புத்தகத்தின் பக்கம் 154 முதல் ஜூலை 25, 2017 தேதிய நகராட்சி கூட்ட தீர்மானங்கள், ஒட்டப்பட்டிருந்தது காண முடிந்தது. அதில் பொருள் 1 (தீர்மானம் 1414) என்ன என நான் பார்த்த போது அதிர்ச்சி அடைந்தேன்.

தீர்மான புத்தகத்தில் (பக்கம் 154) உள்ள தீர்மான வாசகங்கள் (எண்.1414) ல் உள்ள வாசகத்தை விடவும் இரண்டாவது தீர்மானத்தில் உள்ள வாசகத்தை விடவும் முற்றிலும் மாறுபட்டிருந்தது. மேலும் ஒன்றுக்கு மேற்பட்ட முறை, ஒன்றின்மேல் ஒன்றாக, தாள்கள் அந்த பக்கத்தில் ஒட்டப்பட்டுள்ளதையும் என்னால் காணமுடிந்தது.

நகராட்சி அதிகாரிகள் அந்த புத்தகத்தை உடனடியாக நக்ல் எடுக்கவோ, குறிப்பு எடுக்கவோ என்னை அனுமதிக்கவில்லை. அதனால் 10.12.2018 தேதிய மனு வாயிலாக, தீர்மானம் புத்தகத்தின் 154 – 170 பக்கங்கள் வரையிலான நகலினை வேண்டி விண்ணப்பம் செய்தேன். மேலும் தீர்மான எண்ணை (எண்.1414) குறிப்பிட்டு, அதன் நகலையும் மீண்டும் கோரினேன்.

இதுகுறித்து 08.01.2019 தேதிய கடிதம் மூலம் பதில் வழங்கிய நகராட்சியின் பொது தகவல் அலுவலர், இந்த நகல்களை பெற கட்டணமாக ரூபாய். 34 (17 பக்கங்கள்) செலுத்த கோரினார். 29.01.2019 அன்று அந்த கட்டணத்தை நகராட்சியில் நான் செலுத்தினேன். அதனை தொடர்ந்து 29.01.2019 தேதிய கடிதம் முலம், சில ஆவணங்கள் நகராட்சியினால் எனக்கு தபாலில் அனுப்பப்பட்டது.

அந்த தபாலில் நான் கோரிய தீர்மான புத்தகத்தின் பக்கங்கள் 154 – 170 வரையிலானவற்றின் நகல்களுக்கு பதிலாக ஜூலை, ஆகஸ்ட் 2017 கூட்ட விபரங்கள், இணையதளத்தில் உள்ளபடி அச்சு எடுக்கப்பட்டு எனக்கு அனுப்பப்பட்டிருந்தது. தீர்மானம் எண்.1414 நகல் அனுப்பப்படவில்லை.

இந்த ஆவணங்கள் நான் கோரியவை அல்ல என்பதால் 02.02.2019 தேதிய மனு மூலம், ஆணையரிடம் எனது மேல் முறையீட்டை சமர்ப்பித்தேன். எனது மேல்முறையீட்டிற்கு 01.03.2019 தேதிய கடிதம் மூலம் பதில் வழங்கிய ஆணையர், தீர்மானங்களை நகராட்சி இணையதளத்தில் இருந்து பெற்றுக்கொள்ளும்படி தெரிவித்தும், தீர்மானம் எண்.1414 நகலை மட்டும் அனுப்பியிருந்தார். இந்த பதில் திருப்தியில்லாத காரணத்தால், காரணங்களை தெரிவித்து

மீண்டும் எனது மேல்முறையீட்டினை நகராட்சி ஆணையருக்கு 21.03.2019 தேதிய கடிதம் மூலம் மீண்டும் அனுப்பியுள்ளேன்.

இது ஒரு புறம் இருக்க, வேடிக்கை என்னவென்றால் 01.03.2019 தேதிய கடிதம் மூலம் நகராட்சி அனுப்பிய தீர்மானம் எண். 1414 இரண்டாவது இணைப்பு 2–ல் உள்ள தீர்மானம் எண்.1414–ல் உள்ள வாசகங்களில் இருந்தும் பெரிய அளவில் வேறுபட்டிருந்தது, இந்த புதிய ஆவணத்தில், ஏற்கனவே இருந்த 4 தெருக்களோடு சொளுக்கார் தெருவும் சேர்க்கப்பட்டிருந்தது.

எனக்கு இதுவரை நகராட்சி மூலம் அனுப்பப்பட்டுள்ள தீர்மானம் எண். 1414, மூன்று வடிவங்களில் உள்ளது. மேலும் நான் தீர்மானம் புத்தகத்தில் நேரில் பார்த்த தீர்மானம் எண். 1414 இந்த 3 இணைப்புகளில் உள்ள வாசகங்களில் இருந்தும் மாறுபட்டுள்ளது. அதாவது ஒரே தீர்மானம், நான்கு வெவ்வேறு வடிவங்களில் உள்ளது.

தங்கள் சுயலாபம் காரணங்களுக்காக, காயல்பட்டணம் நகராட்சியின் சில அதிகாரிகள் தீர்மானம் எண்.1414 யை Forgery செய்துள்ளது இதன் மூலம் தெரிகிறது. இவ்வாறு தீர்மானங்கள் நினைத்தபடி மாற்றப்படுவது அதிர்ச்சிகரமான மோசடி மட்டுமின்றி, நகராட்சியின் நம்பகத்தன்மையை கேள்விக்குறியாக்கும், அடித்தளத்தை சாய்க்கும் செயலும் ஆகும்.

இந்த முறைக்கேட்டில், காயல்பட்டணம் நகராட்சியின் அப்போதைய ஆணையர் திரு.பொன்னம்பலம், நகராட்சி பொறியாளர் திரு.சுரேஷ் மேற்பார்வையாளர் திரு.சுதாகர் மற்றும் தற்காலிக ஊழியர் திரு.செந்தில் ஆகியோர் ஈடுபட்டுள்ளனர். இவர்களின் கூட்டு தயாரிப்பிலேயே Forgery செய்யப்பட்ட தீர்மான வாசகத்தின் அடிப்படையில், 1 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான சாலைகள் திட்டத்திற்கான ஆவணங்கள், திருநெல்வேலியில் உள்ள நகராட்சி நிர்வாகத்துறை மண்டல இயக்குனர் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டு, பிறகு சென்னையில் உள்ள நகராட்சி நிர்வாகத்துறை ஆணையர் அலுவலகத்திற்கும் அனுப்பப்பட்டுள்ளது.

இந்த மோசடியில் திருநெல்வேலியில் உள்ள நகராட்சி நிர்வாகத்துறை மண்டல இயக்குனர் அலுவலக உயர் அதிகாரிகள் மற்றும் சென்னையில் உள்ள நகராட்சி நிர்வாகத்துறை உயர் அதிகாரிகளின் ஒத்துழைப்பு இல்லாமல் இருந்திருக்காது. நடுவத்தின் விதிமுறைகள்படி உள்ளாட்சி மன்றத்தின் மக்கள் பிரதிநிதிகள், அலுவலர்கள், ஒப்பந்ததாரர்கள் மட்டும் விசாரணை செய்ய முடியும் என்பதால், மண்டல அலுவலக அதிகாரிகள் மீதும், சென்னையில் உள்ள நகராட்சி நிர்வாகத்துறை அதிகாரிகள் மீதும் எனது புகாரை, நடுவத்தில் நான் சமர்ப்பிக்கவில்லை. இந்த விசாரணையின் முடிவில், இந்த முறைக்கேட்டில் அவர்களின் பங்கினையும் முறையாக விசாரிக்க அரசுக்கு தாங்கள் பரிந்துரை செய்வீர்கள் என நான் நம்புகிறேன். இறுதியாக எனது இந்த மனு மூலம், கீழ்க்காணும் எனது இரண்டு விண்ணப்பங்களை தங்களிடம் சமர்ப்பிக்கிறேன்.

(1) நான் மேலே சமர்ப்பித்துள்ள குற்றச்சாட்டுகளை, நான் இணைத்துள்ள ஆதாரங்கள் அடிப்படையில் விசாரித்து காயல்பட்டணம் நகராட்சியின் தீர்மான புத்தகத்தை திருத்தும் முறைக்கேட்டில் ஈடுபட்ட அப்போதைய நகராட்சி ஆணையர் திரு.பொன்னம்பலம்,

நகராட்சி பொறியாளர் திரு.சுரேஷ் மேற்பார்வையாளர் திரு.சுதாகர் மற்றும் ஒப்பந்த பணியாளர் திரு.செந்தில்குமார் ஆகியோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கும்படி தங்களை கேட்டுக்கொள்கிறேன்.

(2) இந்த முறைக்கேடு, தமிழகத்தில் உள்ள அனைத்து உள்ளாட்சி அமைப்புகளிலும் உள்ள தீர்மான புத்தகங்கள் எவ்வித பாதுகாப்புமின்றி உள்ளது என்பதை உணர்த்தியுள்ளது. இதற்கு ஒரு நிரந்திர தீர்வு காண, முக்கிய ஆவணமான தீர்மான புத்தகத்தை 100 சதவீத பாதுகாப்புடன் பராமரிக்க வழிமுறைகளை உத்தரவாக வெளியிடும்படியும் தங்களை கேட்டுக்கொள்கிறேன் என தெரிவித்துள்ளார்.

2) இந்நேர்வு தொடர்பான அறிக்கையை அனுப்பி வைக்குமாறு இம்முறைமன்ற நடுவ 16.04.2019 நாளிட்ட அறிக்கை வாயிலாக காயல்பட்டணம் நகராட்சி ஆணையாளருக்கு ஆணையிடப்பட்டது. காயல்பட்டணம் நகராட்சி ஆணையாளர் தமது அறிக்கையில்:–

காயல்பட்டணம் நகராட்சியில் தமிழ்நாடு நகர் புறசாலைகள் மேம்பாட்டுத்திட்டம் 2017–18ன் கீழ் ரூ.100.00 இலட்சம் மதிப்பீட்டில் நகராட்சியின் பொதுமக்கள் அதிகம் பயன்படுத்தும் அதிகமாக சேதமடைந்த ஐந்து சாலைகளில் (அப்பாபள்ளி தெரு சாலை, மக்தூம் தெரு, செப்புகுடைஞ்சான் தெரு, சதுக்கைத் தெரு சாலையில் ஜலாலியா ஹால் முதல் வடக்குபகுதி மற்றும் சொளுக்கார் தெரு சாலை) சிமெண்ட் பேவர் பிளாக்கல் பதித்து மேம்பாடு செய்திட நகர்மன்ற தீர்மானம் எண்.1414 நாள்.25.07.2017ன்படி மன்றஅனுமதி பெறப்பட்டு அதன்படி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் நிர்வாக அனுமதி செயல்முறைகள் ந.க.எண்.21422/2017/E3 நாள்.03.10.2017ன்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டு, அதன் அடிப்படையில் நகராட்சி நிர்வாக தலைமைப் பொறியாளர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.24545/2017/DO2 நாள்.30.11.2017ன்படி தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளி விதிகளின்படி 09.01.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு வரப்பெற்ற குறைந்த ஒப்பந்தப்புள்ளிக்கு நகர்மன்ற தீர்மானம் எண். 1508 நாள்.30.01.2018ன்படி மன்றஅனுமதி பெறப்பட்டு அன்று வேலை உத்திரவு வழங்கப்பட்டு அதன்படி தற்பொழுது அனுமதிக்கப்பட்ட ஐந்து பணிகளில் 2 பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.

மேற்காணும் திட்டத்திற்கான பணிகளை உடனடியாக தேர்வுசெய்து அதற்கு மன்ற அனுமதி பெற்று திட்ட அனுமதிக்காக சமர்ப்பித்திட விரைந்து நடவடிக்கை எடுத்திட நகராட்சி நிர்வாக ஆணையரக செல்பேசி அழைப்பில் நகராட்சி ஆணையரிடம் தெரிவிக்கப்பட்டதின்படி மேற்காணும் திட்டத்திற்கான சாலைப்பணிகளை தேர்வு செய்தும் அதற்கு மன்ற அனுமதிபெறவும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. திட்டப்பணியின் அவசர அவசியம் கருதி 25.07.2017 அன்று நடைபெறவிருந்த நகர்மன்ற சாதாரணக்கூட்டமன்றப் பொருளில்

மன்றப்பொருள் எண்.1ல்

காயல்பட்டணம் நகராட்சியில் 14வது வார்டுக்குட்பட்ட பாஸ்நகர் மூன்றாவது தெரு சாலை மண் சாலையாக இருப்பதால் பொதுமக்கள் நலன்கருதி அதனை சிமெண்ட் கல்பதித்து புதியதாக சாலை அமைக்க தயாரிக்கப்பட்ட உத்தேசமதிப்பீடு ரூ.9.68 இலட்சத்திற்கு மன்ற

அனுமதிக்கும் மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவு செய்திடவும் மன்ற அனுமதிக்காக

என்ற மன்றப்பொருள் சேர்க்கப்பட்டு அதனுடன் கூடுதலாக 6 (ஆறு) மன்றப்பொருள்களும் சேர்த்து மொத்தம் 7 (ஏழு) மன்றப்பொருள்கள் சேர்க்கப்பட்டு மாதிரி அஜண்டா தயார் செய்து நகராட்சி தனி அலுவலர் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்பட்டது. ஆனால் புதியதாக தமிழ்நாடு நகர் புறசாலைகள் மேம்பாட்டுத்திட்டம் 2017–18 க்கான சாலைப்பணிகளை தேர்வுசெய்து மன்ற அனுமதி பெற்று நிதிஒப்புதல் பெற உடனடியாக தீர்மானத்தினை நகராட்சி நிர்வாக ஆணையரக அலுவலகத்தில் சமர்ப்பிக்க அறிவுறுத்தப்பட்டதால் திட்டப்பணியின் அவசர அவசியம் கருதியும் நிதி ஒதுக்கீடு பெற பணி செய்வதற்கான தீர்மானத்தினை உடனடியாக சமர்ப்பிக்க உயர் அலுவலர்களால் அறிவுறுத்தப்பட்டதாலும் நகராட்சியின் நலன்கருதி மாதிரி அஜண்டாவில் மன்றப்பொருள் 1ல் சேர்க்கப்பட்ட பணியானது நகராட்சி ஆணையர் மற்றும் தனிஅலுவலரால் இரத்து செய்யப்பட்டு அதற்கு பதிலாக திட்டப்பணியின் கீழ்க்கண்ட மன்றப்பொருள் சேர்க்கப்பட்டது.

மன்றப்பொருள் எண்.1 (தீர்மானம் எண்.1414)

காயல்பட்டணம் நகராட்சியில் புதியகுடிநீர் மேம்பாட்டுத்திட்டப்பணிகள் முடிக்கப்பட்டுள்ளதால் குடிநீர் குழாய்கள் பதிக்கும் பணியால் சேதமடைந்துள்ளசாலைகள் மற்றும் மழையினால் சேதமடைந்துள்ள சாலைகளை மேம்பாடு செய்யமுதற்கட்டமாக தமிழ்நாடு நகர்புற சாலை உட்கட்டமைப்புநிதி 2017–18ன் கீழ் கீழ்க்கண்ட விபரப்படியான சாலை மேம்பாட்டுப்பணிகளை அரசிடம் மானியம் பெற்று செய்து முடிக்க அனுமதிக்கு

| வ.எண். | வேலையின் பெயர் | சாலையின் நீளம் (கி.மீ) | சாலையின் அகலம் (மீட்டரில்) | மதிப்பீட்டு தொகை (லட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1. | காயல்பட்டணம் நகராட்சி அப்பாபள்ளி தெரு சாலை, மக்தூம் தெரு, செப்புகுடைஞ்சான் தெரு, சதுக்கைத் தெரு சாலையில் ஜலாலியா ஹால் முதல் வடக்குபகுதி மற்றும் சொளுக்கார் தெரு சாலைகளில் சிமெண்ட் பேவர் பிளாக்கல் பதித்து மேம்பாடு செய்தல் | 1.425 | 5.00 | 100.00 |

மேலும் மேற்கண்டவாறு தமிழ்நாடு நகர்புறசாலைகள் மேம்பாட்டுத்திட்டம் 2017–18ன் கீழ் திட்டமதிப்பீடுகள் முதலில் சமர்ப்பிக்கப்படும் பொழுது சாலைப்பணிகள் தனித்தனியாக எடுக்கப்பட்டு அதன் நீளம் அகலம் அதற்குரிய மதிப்பீடுகள் என்ற விபரங்களுடன் சமர்ப்பிக்கப்படுவது வழக்கம். அதன்படி தயார் செய்யப்பட்ட மாதிரி மன்றத்தீர்மானமே மனுதாரர் இணைப்பு (2) ல் சுட்டிக்காட்டப்பட்டுள்ள தீர்மானமாகும். மேலும் திட்டப்பணியாக இருப்பதாலும் நிதிஒதுக்கீடு பெறவேண்டிய அவசியம் இருப்பதாலும் பணியின் அவசியம் கருதி முதலில் மாதிரி

மன்றத்தீர்மானம் தயார் செய்யப்பட்டு நகராட்சி ஆணையாளர் / தனிஅலுவலர் அவர்களின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படும்.

நகராட்சி ஆணையாளர் / தனிஅலுவலர் அவர்களால், உயர் அலுவலர்களின் அறிவுரைகளின்படி அதில் திருத்தங்கள் மேற்கொண்டு அதன்படி இறுதியாக மன்றத்தீர்மானம் தயார் செய்திட அறிவுரை வழங்கப்படும். அதன்படி தயார் செய்யப்பட்ட இந்தமாதிரி தீர்மானமானது தொடர்புடைய கோப்பில் இருந்ததால் மனுதாரருக்கு தவறுதலாக வழங்கப்பட்டுள்ளது. மேலும் மேற்கண்ட திட்டத்திற்கு முதலில் நான்குசாலைகள் தேர்வு செய்யப்பட்டு அதற்கு தமிழ்நாடு அரசுவிலை விகிதப்பட்டியல் 2017–18ன்படி (Schedule of Rates 2017–18 with effect from 01.06.2017) மதிப்பீடு தயார் செய்யப்பட்டது. ஆனால் அரசு GST வரிவிதிப்பின் காரணமாக தமிழ்நாடு அரசு திருத்திய விலை விகிதப்பட்டியல் 2017–18 (Revised Schedule of Rates 2017–18 –with effect from 21.10.2017) வெளியிட்டு அதன்படி மதிப்பீடுகளில் திருத்தம் செய்திடவும் சாலைப்பணிகளுக்கு தனித்தனியாக மதிப்பீடு தயாரிக்காமல் அனைத்து சாலைப்பணிகளையும் சேர்த்து மொத்த நீளத்திற்கும் சிப்பம் முறையில் (package) மதிப்பீடுகள் தயார் செய்யவும் நகராட்சி நிர்வாக ஆணையரக பொறியியல் பிரிவு அலுவலர்களின் மூலம் தெரிவிக்கப்பட்டதின்படி தமிழ்நாடு அரசு திருத்திய விலைவிகிதப்பட்டியல் 2017– 18ன்படி மீண்டும் திருத்தியமதிப்பீடுகள் தயார் செய்யப்பட்ட பொழுது கூடுதலாக ஒரு சாலைப்பணியும் சேர்க்கப்பட்டு மதிப்பீடுகள் சிப்பம் முறையில் தயார் செய்யப்பட்டு அதன்படி இறுதியாக மாதிரி மன்றத்தீர்மானமும் தயார் செய்யப்பட்டு நகராட்சி ஆணையாளர் / தனிஅலுவலர் அவர்களின் ஒப்புதல் பெற்று நிரந்தர தீர்மானமாக்கப்பட்டு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் நிர்வாக அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்பட்டு, நிர்வாக அனுமதி பெறப்பட்டு நகராட்சி நிர்வாக ஆணையரக தலைமைப் பொறியாளர், சென்னை அவர்களின் தொழில்நுட்ப அனுமதியும் பெறப்பட்டுள்ளது. ஆதலால் புகார்தாரர் தெரிவித்துள்ளவாறு எந்தவித முறைகேடுகளும் நடைபெறவில்லை. மேலும் மேற்கண்ட மாதத்திற்கான மன்றதீர்மானங்கள் நகராட்சி இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்ட பொழுது தவறுதலாக ஏற்கனவே மாதிரி அஜண்டா பதிவேட்டில் உள்ள இரத்து செய்யப்பட்ட மன்றப்பொருள் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. பின்னர் மனுதாரரால் தவறு சுட்டிக்காட்டப்பட்டதின் பேரில் தனி அலுவலரால் திருத்தம் செய்யப்பட்ட தமிழ்நாடு நகர்புறசாலைகள் மேம்பாட்டுத்திட்டம் 2017–18க்கான பணிகள் (தீர்மானம் எண்.1414) மன்றப்பொருளில் சேர்க்கப்பட்டுள்ள தீர்மான நகல் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டு திருத்தம் வெளியிடப்பட்டுள்ளது என்ற விபரம் பணிவுடன் தெரிவிக்கப்படுகிறது என்று தெரிவித்துள்ளார்.

3) முறையீட்டு மனு குறித்து 29.08.2019 அன்று மனுதாரர் தமது வாக்குமூலத்தில்:–

02.04.2019 நாளிட்ட புகார் மனு என்னால் அனுப்பப்பட்டது. அதற்கு பின்பு இதே செய்தி டைம்ஸ் ஆப் இந்தியா என்ற நாளிதழில் 15.07.2019 அன்று வெளியானது. 25.07.2017 அன்று தீர்மானம் எண்.1414 ல் பாஸ் நகர், மூன்றாவது தெருவில் பணிக்கு ரூ.9.68 லட்சம் மதிப்பீட்டில் சாலை அமைக்கும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இது தீர்மானம் எண்.1414 என உள்ளது.

அதே போன்று அப்பாபள்ளி தெரு, மக்தூம் தெரு, செப்புகுடைந்தான் தெரு, சதுக்கை தெரு, சொளுக்கார் தெரு, ஆகிய இடங்களில் பேவர் பிளாக் தரைதளம் அமைப்பதற்காக ரூ.1 கோடி ரூபாய் திட்டமதிப்பீட்டுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இதுவும் தீர்மானம் எண்.1414 என உள்ளது. இதுகுறித்து பின்பு தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் பெறப்பட்டு இதுகுறித்து பரிசீலித்த போது தீர்மானம் எண்.1414 உண்மையிலேயே இந்த வேலைப்பற்றி அல்ல. எனவே இரண்டு வேலைகளுக்கு ஒரே தீர்மான எண்ணை குறிப்பிட்டுள்ளார். எதற்காக இதுபோன்ற தவறுதலான எண் வழங்கினார்கள் என்று தெரியவில்லை. (நிகழ்ச்சி குறிப்பு பதிவேட்டில்) இப்பகுதியில் ஏற்கனவே இருந்த தீர்மானத்தின் மீது தாள் ஒட்டப்பட்டு இருந்தது. அது தீர்மானம் எண். 1414 ஏற்கனவே நகராட்சியினுடைய இணையதளத்தில் இது 9.68 லட்சத்திற்கான வேறு பணியாகும். எனவே, தற்போது 1414 பாஸ்நகரை எடுத்து விட்டு பிற ரோடுகளை சேர்த்து இணையதளத்தில் உள்ளதாக மாறாக குறிப்பிட்டுள்ளார்கள். இணையதளத்தில் தீர்மானம் எண்.1414 பாஸ்நகர் சாலை என்றே உள்ளது. டைம்ஸ் ஆப் இந்தியாவில் 15.07.2019ல் இந்த செய்தி வந்தவுடன் தவறாக குறிப்பு செய்யப்பட்டது என ஒரு இணைப்பு குறிப்பு வழங்கியுள்ளார்கள். விதிகளில் (மாவட்ட நகராட்சிகள் சட்டத்திற்கு) தீர்மானம் நிறைவேற்றப்பட்டவுடன் மூன்று நாட்களுக்குள் சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவருக்கும், மண்டல நகராட்சிகளின் இயக்குநருக்கும், அனுப்புவது சட்டபூர்வமானது ஆகும். ஆனால் தற்போது அந்த நடைமுறை முழுவதும் நிறுத்தப்பட்டுவிட்டது. அதை மீண்டும் நடைமுறைப்படுவதற்கு உரிய ஆணையிடுமாறு கேட்டுக் கொள்கிறேன். எனவே, எதிர்காலத்தில் நிகழ்ச்சி குறிப்புகளில் (minutes) சட்டத்திற்கு புறமாக திருத்தம் செய்யாமல் இருக்க உரிய ஆணையிடுமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் ஒரே தீர்மானம் எண். 1414, மூன்று வடிவில் இருப்பதால், தீர்மானம் புத்தகத்தை நேரில் பார்க்க – தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் விண்ணப்பம் செய்யப்பட்டு, நவம்பர் 2018 ல் நேரில் – தீர்மானம் புத்தகம் (Minutes Book) பார்க்கப்பட்டது.

அப்போது ஜூலை 25, 2017 நகர்மன்ற கூட்ட தீர்மானங்கள் – அந்த புத்தகத்தில், பக்கம் 154 முதல் ஒட்டப்பட்டுள்ளது தெரிந்தது. மேலும் – குறைந்தது இரண்டு அல்லது மூன்று முறை, ஒன்றுக்கு மேல் ஒன்றாக, தாள்கள் ஒட்டப்பட்டுள்ளதாக – உணரவும் முடிந்தது. அதில் – தற்போது, இணைப்பு 8 ல் உள்ள வடிவில், தீர்மானம் எண். 1414 ஒட்டப்பட்டுள்ளது காண முடிந்தது.

இந்த சட்டத்திற்கு புறம்பான செயலை உறுதி செய்ய – மீண்டும், தீர்மானம் புத்தகத்தில் உள்ள பக்கங்கள் 154 முதல் சில பக்கங்களின் நகல் தகவல் அறியும் சட்டத்தின் கீழ் கோரப்பட்டு பெறப்பட்டது.

இந்த பக்கத்தை – கண்ணால் பார்த்தாலே, அந்த தீர்மானம் திருத்தப்பட்டுள்ளதை உறுதி செய்யலாம்.

தீர்மானம் புத்தகத்தில், கூட்ட பொருட்கள் இடது புறம் ஒட்டப்படுவதும், முடிவுகள் – வலது புறம் ஒட்டப்படுவதும் வழக்கம, மேலும் – இடது பக்கத்தில் உள்ள பொருள் எண்ணுக்கு நேராக, வலது புறத்தில் – தீர்மானம் எண் மற்றும் முடிவு எழுதப்படும்.

பக்கம் 154 இல் – இடது பக்கம், பொருள் எண்.1, சட்டத்திற்கு புறம்பாக திருத்தப்பட்டு ஒட்டப்பட்ட காரணத்தால், பொருள் எண்.2 இடம் மாறியுள்ளது. அதன் காரணத்தால் – வலது பக்கம் உள்ள தீர்மானம் எண். 1415 சொற்கள் (பொருள் 2 க்கான தீர்மானம்) இடம் மாறியுள்ளது, இந்த முறைக்கேட்டினை தெளிவாக உறுதி செய்கிறது என்று தெரிவித்துள்ளார்.

4) முறையீட்டு மனுதாரரின் மனு குறித்து காயல்பட்டணம் முன்னாள் நகராட்சி ஆணையர் (தற்போது காங்கயம் நகராட்சி) கீழ்கண்டவாறு வாக்குமூலம் அளித்துள்ளார்:–

02.04.2019 நாளிட்ட முகமது சாலிகு என்பவருடைய மனு விவரம் எனக்குத் தெரியும். இது குறித்து எழுத்து பூர்வமான என்னுடைய விரிவான அறிக்கையினை இன்று நேரடியாக சமர்ப்பித்துள்ளேன். அதையே என்னுடைய வாக்குமூலமாக ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன். திருத்திய மதிப்பீடு இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்படாமல் இருந்தது. தற்பொழுது பதிவேற்றம் செய்யப்பட்டுவிட்டது. நான் பணிமாறுதலில் சென்றுவிட்டதால் பதிவேற்றம் செய்யப்படுவதில் கால தாமதம் ஏற்பட்டுவிட்டது. மாதிரி பொருள் (Agenda) தயார் செய்து தனி அலுவலரின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டது. ஒப்புதல் வழங்கும் முன்பே கணினியில் பதிவேற்றம் செய்யப்பட்டுவிட்டது. அப்போதைய கணினி இயக்குபவர் (Data Entry Operator) தவறாக கணினியில் பதிவேற்றம் செய்துவிட்டார். திருத்தம் செய்துவிட்ட பொருளை மீண்டும் கணினியில் பதிவேற்றம் செய்யப்படவில்லை. இந்நிலையில் நான் பணியிட மாறுதலில் சென்றுவிட்டதால் அதனை கண்காணிக்க தவறிவிட்டோம். மனுதாரர் மூன்று வடிவங்களில் தகவல் அறியும் சட்டத்தின் கீழ் விவரங்கள் பெற்றுள்ளதாக தெரிவித்துள்ளார். அந்த விவரங்கள் வழங்கும் பொழுது நான் பணியிட மாறுதலில் சென்றுவிட்டேன். மன்றபொருள் ஒருமுறை மட்டுமே திருத்தம் செய்யப்பட்டுள்ளது. இப்பணிகளை மேற்கொண்டதில் நிதி இழப்புகளோ அல்லது முறைகேடுகளோ எதுவும் இல்லை என தெரிவித்துள்ளார்.

5) முறையீட்டு மனுதாரரின் மனு குறித்து காயல்பட்டணம் நகராட்சி முன்னாள் பொறியாளர் (தற்போதைய புளியங்குடி நகராட்சி பொறியாளர்) கீழ்கண்டவாறு தமது வாக்குமூலத்தை அளித்துள்ளார்:–

மனுதாரர் திரு.முகமது சாலிகு என்பவருடைய 02.04.2019 நாளிட்ட முறையீட்டு மனு விவரம் தெரியும். தற்பொழுது நான் புளியங்குடி நகராட்சியில் பொறியாளராக பணிபுரிகின்றேன். காயல்பட்டணம் முன்னாள் நகராட்சி ஆணையாளர் திரு.பொன்னம்பலம் அவர்களிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்ட போது நான் உடன் இருந்தேன். அவர் அளித்த வாக்குமூலத்தையே எனது வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் எழுத்துபூர்வமான எனது வாக்குமூலத்தையும் இன்று சமர்ப்பித்துள்ளேன் என தெரிவித்துள்ளார்.

6) முன்னாள் காயல்பட்டணம் நகராட்சி பொறியாளர் தமது எழுத்து பூர்வ வாக்குமூலத்தில்:–

காயல்பட்டணம் நகராட்சியில் தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் 2017–18–ன் கீழ் ரூ100.00 இலட்சம் மதிப்பீட்டில் பொதுமக்கள் அதிகமாக புழங்கும் சேதமடைந்த ஐந்து சாலைகள் புதியதாக சீரமைக்க மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அரசு நிதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. மேற்படி பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு பணி உத்திரவு வழங்கப்பட்டு இரண்டு பணிகள் முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது. இதர மூன்று பணிகள் முன்னேற்றத்தில் உள்ளது. மேற்படி பணிகள் மதிப்பீடு மன்ற அனுமதி பெறப்பட்டதில் முதலில் 14வது வார்டு பாஸ் நகர் பகுதியில் சிமெண்ட் கல்பதித்தல் வேலையை செய்திட மன்ற பொருள் எண்.01 (மன்ற தீர்மானம் எண்.1414) படி மாதிரி மன்ற பொருள் (Rough Agenda) தயார் செய்யப்பட்டு இருந்தது பின்னர் நகரின் அனைத்து பகுதிகளும் பயன் பெறும் வகையில் மாற்றம் செய்யப்பட்டு ஐந்து பணிகள் தேர்வு செய்யப்பட்டு மன்ற பொருளில் உரிய திருத்தம் செய்யப்பட்டு முதலில் தேர்வு செய்யப்பட்ட பணிகள் கைவிடவும் இரண்டாவது தேர்வு செய்யப்பட்ட ஐந்து பணிகள் செய்யவும் மன்ற கூட்ட நடவடிக்கை புத்தகத்தில் திருத்தம் செய்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. மேற்படி திருத்தம் உரிய கால கெடுவிற்குள் நகராட்சி பணியாளர்களால் இணையதளத்தில் மேற்கொள்ளவில்லை. எனவே, பழைய தீர்மானம் மனுதாரரால் பதிவிறக்கம் செய்யப்பட்டு பெறப்பட்டுள்ளது. திருத்தம் செய்யப்பட்ட தீர்மானம் (Revised subject) தற்சமயம் இணையதளத்திலும் திருத்தம் செய்யப்பட்டு பதிவேற்றம் செய்யப்பட்டுவிட்டது என்பதை மிக்க பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். மேற்படி நிகழ்வில் எவ்வித முறைகேடு மற்றும் நிதிஇழப்பு நகராட்சிக்கு ஏற்படவில்லை என்பதையும் மிக்க பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் காயல்பட்டணம் நகராட்சி முன்னாள் ஆணையர் திரு.பொன்னம்பலம் அவர்களிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்ட போது நான் உடன் இருந்தேன். அவரது வாக்குமூலத்தையே எனது வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளுமாறு பணிவுடன் வேண்டிக் கொள்கிறேன் என தெரிவித்துள்ளார்.

7) இம்மனு தொடர்பாக காயல்பட்டணம் நகராட்சி பணி மேற்பார்வையாளர் திரு.J.சுதாகர் கீழ்கண்டவாறு வாக்குமூலம் அளித்துள்ளார்.

மனுதாரர் திரு.முகமது சாலிகு என்பவருடைய 02.04.2019 நாளிட்ட முறையீட்டு மனு விவரம் தெரியும். காயல்பட்டணம் முன்னாள் நகராட்சி ஆணையாளர் திரு.பொன்னம்பலம் அவர்களிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்ட போது நான் உடன் இருந்தேன். அவர் அளித்த வாக்குமூலத்தையே எனது வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் எழுத்துபூர்வமான எனது வாக்குமூலத்தையும் இன்று சமர்ப்பித்துள்ளேன் என தெரிவித்துள்ளார்.

8) காயல்பட்டணம் நகராட்சி பணி மேற்பார்வையாளர் தமது எழுத்து பூர்வ வாக்குமூலத்தில் காயல்பட்டணம் நகராட்சி ஆணையாளரின் வாக்குமூலத்தையே தமது வாக்குமூலமாக எடுத்து கொள்ளுமாறு தெரிவித்துள்ளார்.

இந்நேர்வில் மனுதாரரின் மனு, அவரது வாக்குமூலம், முன்னாள் நகராட்சி ஆணையாளரின் வாக்குமூலம், முன்னாள் நகராட்சி பொறியாளரின் வாக்குமூலம், நகராட்சி பணிமேற்பார்வையாளரின் வாக்குமூலம் ஆகியவைகள் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

25.07.2017 அன்று தீர்மானம் எண்.1414 ல் பாஸ் நகர், மூன்றாவது தெருவில் சாலை பணிக்கு ரூ.9.68 லட்சம் மதிப்பீட்டில் சாலை அமைக்கும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இது தீர்மானம் எண்.1414 என உள்ளது. அதே போன்று அப்பாபள்ளி தெரு, மக்தூம் தெரு, செப்புகுடைந்தான் தெரு, சதுக்கை தெரு, சொளுக்கார் தெரு, ஆகிய இடங்களில் பேவர் பிளாக் தரைதளம் அமைப்பதற்காக ரூ.1 கோடிக்கு திட்டமதிப்பீட்டுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இதுவும் தீர்மானம் எண்.1414 என உள்ளது. இரண்டு வேலைகளுக்கு ஒரே தீர்மான எண்ணை குறிப்பிட்டுள்ளார். தீர்மானம் எண். 1414 ஏற்கனவே நகராட்சியினுடைய இணையதளத்தில் இது ரூ.9.68 லட்சத்திற்கான வேறு பணியாகும். எனவே, தற்போது 1414 பாஸ்நகரை எடுத்து விட்டு பிற ரோடுகளை சேர்த்து இணையதளத்தில் உள்ளதாக மாறாக குறிப்பிட்டுள்ளார்கள். இணையதளத்தில் தீர்மானம் எண்.1414 பாஸ்நகர் சாலை என்றே உள்ளது. விதிகளில் (மாவட்ட நகராட்சிகள் சட்டத்திற்கு) தீர்மானம் நிறைவேற்றப்பட்டவுடன் மூன்று நாட்களுக்குள் சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சி தலைவருக்கும், மண்டல நகராட்சிகளின் இயக்குநருக்கும், அனுப்புவது சட்டபூர்வமானது ஆகும். ஆனால் தற்போது அந்த நடைமுறை முழுவதும் நிறுத்தப்பட்டுவிட்டது என்று மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளதற்கு நகராட்சி முன்னாள் ஆணையாளர் மற்றும் பொறியாளர், காயல்பட்டணம் நகராட்சியில் தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் 2017–18–ன் கீழ் ரூ100.00 இலட்சம் மதிப்பீட்டில் பொதுமக்கள் அதிமாக புழங்கும் சேதமடைந்த ஐந்து சாலைகள் புதியதாக சீரமைக்க மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அரசு நிதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. மேற்படி பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு பணி உத்திரவு வழங்கப்பட்டு இரண்டு பணிகள் முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது எனவும் இதர மூன்று பணிகள் முன்னேற்றத்தில் உள்ளது. மேற்படி பணிகள் மதிப்பீடு மன்ற அனுமதி பெறப்பட்டதில் முதலில் 14வது வார்டு பாஸ் நகர் பகுதியில் சிமெண்ட் கல்பதித்தல் வேலையை செய்திட மன்ற பொருள் எண்.01 (மன்ற தீர்மானம் எண்.1414) படி மாதிரி மன்ற பொருள் (Rough Agenda) தயார் செய்யப்பட்டு இருந்தது பின்னர் நகரின் அனைத்து பகுதிகளும் பயன் பெறும் வகையில் மாற்றம் செய்யப்பட்டு ஐந்து பணிகள் தேர்வு செய்யப்பட்டு மன்ற பொருளில் உரிய திருத்தம் செய்யப்பட்டு முதலில் தேர்வு செய்யப்பட்ட பணிகள் கைவிடவும் இரண்டாவது தேர்வு செய்யப்பட்ட ஐந்து பணிகள் செய்யவும் மன்ற கூட்ட நடவடிக்கை புத்தகத்தில் திருத்தம் செய்து மாதிரி பொருள் (Agenda) தயார் செய்து தனி அலுவலரின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டது. ஒப்புதல் வழங்கும் முன்பே கணினியில் பதிவேற்றம்

செய்யப்பட்டுவிட்டது. அப்போதைய கணினி இயக்குபவர் (Data Entry Operator) தவறாக கணினியில் பதிவேற்றம் செய்துவிட்டார். திருத்தம் செய்துவிட்ட பொருளை மீண்டும் கணினியில் பதிவேற்றம் செய்யப்படவில்லை. மன்றபொருள் ஒருமுறை மட்டுமே திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்திருப்பது ஏற்ககூடியது அல்ல. நகர்மன்ற தீர்மானம் முறைப்படி நகராட்சி நிர்வாக இயக்குநர் மற்றும் தலைமை பொறியாளரின் ஒப்புதல் பெறப்பட்டே இயற்றப்பட்டுள்ளது என்றாலும் அதனை இணைய தளத்தில் பதிவேற்றம் செய்ததில் தான் தவறு ஏற்பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது. கணினி இயக்குபவர் மாதிரி பொருள் (Agenda) தயார் செய்து அதில் தனி அலுவலர் ஒப்புதல் வழங்கும் முன்பே கணினியில் பதிவேற்றம் செய்துவிட்டார். இதனை சம்மந்தபட்ட எந்த அலுவலரும் கவனிக்கவில்லை காயல்பட்டணம் நகராட்சியில் மன்ற பொருள் தவறுதலாக பதிவேற்றம் செய்யப்பட்டு அது மனுதாரரால் சுட்டி காட்டியதின் பேரில் தான் அது தனி அலுவலரால் திருத்தம் செய்யப்பட்டு தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் 2017–18–க்கான பணியின் தீர்மானம் எண்.1414 இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. இது நகராட்சியின் நிர்வாக சீர்கேட்டையே காட்டுகிறது. இந்த நிர்வாக சீர்கேட்டை கவனிக்க தவறிய சம்மந்தப்பட்ட அலுவலர்கள் மீது துறைரீதியான ஒழுங்கு நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு பரிந்துரைத்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2020 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 10 –ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு.எம்.எஸ்.முஹம்மது சாலீஹு,
ப.எண்.37, பு.எண்.86, முத்துமாரி செட்டி தெரு,
சென்னை –1.

2) ஆணையாளர்,
காயல்பட்டனம் நகராட்சி, காயல்பட்டனம்.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளருக்காக.